A

**CCE RR**
**REVISED**

ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 8 ]

Total No. of Printed Pages : 8 ]

ಒಟ್ಟು ಪ್ರಶೆಗಳ ಸಂಖ್ಯೆ : 38 ]

Total No. of Questions : 38 ]

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 85-T**

**Code No. : 85-T**

Question Paper Serial No. **30**

இங்கிருந்து பிரிக்கவும்

**TEAR HERE TO OPEN THE QUESTION PAPER**
**இங்கு ஓட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்**

**Tear here**

# ವಿಷಯ : ಸಮಾಜ ವಿಜ್ಞಾನ

# Subject : SOCIAL SCIENCE

**( ತಮಿಳು ಭಾಷಾಂತರ / Tamil Version )**

**( ಹೊಸ ಪಠ್ಯಕ್ರಮ / New Syllabus )**

**( ಪುನರಾವರ್ತಿತ ಶಾಲಾ ಅಭ್ಯರ್ಥಿ / Regular Repeater )**

ದಿನಾಂಕ : 23. 09. 2020 ] [ Date : 23. 09. 2020

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 10-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ–1-45 ರವರೆಗೆ ] [ Time : 10-30 A.M. to 1-45 P.M.

ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 80 ] [ Max. Marks : 80

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 38-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது (Sealed by reverse jacket). நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும்பொழுது வலக்கைப் பக்க ஓரத்தை பிரித்து திறக்க வேண்டும். வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும், பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. புறவய மற்றும் அகவய வகை வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றவும்.
4. வலக்கைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணாக்கர்கள் விடைகளை எழுதுவதற்கான அதிகபட்ச நேரம் வினாத்தாளின் மேற்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ளது, மாணாக்கர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக ஒதுக்கப்பட்ட 15 நிமிடங்களையும் அது உள்ளடக்கியது.

I. பின்வரும் வினாக்கள் / மற்றும் முழுமைபெறாத கூற்றுகளுக்கு நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றே ஒன்று சரியானது அல்லது பொருத்தமானது. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையினை அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் விடைக் குறியீட்டு எழுத்துடன் முழுவதுமாக எழுத வேண்டும். $8 \times 1 = 8$

1. சால்பாய் உடன்படிக்கையில் முடிவுற்ற போர் :

   (A) இரண்டாம் ஆங்கில மராத்தியப் போர்

   (B) இரண்டாம் ஆங்கில சீக்கியப் போர்

   (C) முதல் ஆங்கில மராத்தாப் போர்

   (D) முதல் ஆங்கில மைசூர்ப் போர்

2. 1938-ல் நடைபெற்ற ஹரிபுரா காங்கிரஸ் மாநாட்டிற்கு தலைமை வகித்தவர்

   (A) சர்தார் வல்லபாய் பட்டேல்

   (B) Dr. B.R. அம்பேத்கார்

   (C) பாலகங்காதர திலகர்

   (D) சுபாஷ் சந்திர போஸ்

3. கி.பி. 1789-ல் நடைபெற்ற பிரெஞ்சு புரட்சியின் தலையாய நோக்கம்

   (A) ஐ.நா. சபையை ஏற்படுத்துவது

   (B) மனித உரிமைகளை பாதுகாப்பது

   (C) அயல்நாட்டு படையெடுப்பை தடுப்பது

   (D) சர்வதேச சங்கத்தை ஏற்படுத்துவது

4. நர்மதையை காத்திடும் இயக்கத்தை (Narmada Bachavo Andolana) முன்னின்று நடத்தியவர்

   (A) மேத்தா பாட்கர்

   (B) Dr. சிவராம் காரந்த்

   (C) குஸ்மா சொரபா

   (D) சுந்தர் லால் பகுகுணா

5. குழந்தை உதவி மையத்தின் தொலைபேசி எண்

   (A) 1098

   (B) 1090

   (C) 1089

   (D) 1097

6. பின்வருவனவற்றுள் எது சரியான இணை என கண்டறிக :

   (A) அந்திஸ் - மேற்கு வங்காளம்

   (B) காலபைசாக்கிஸ் - பஞ்சாப்

   (C) மாவடு உதிர்மழை - தமிழ்நாடு

   (D) காபி புளோசம் - கருநாடகம்

7. 2014-ல் இந்தியாவின் மனித வளர்ச்சி காட்டியின் குறியீட்டு எண்

   (A) 0.586

   (B) 0.344

   (C) 0.562

   (D) 0.856

8. வெண்மை புரட்சியின் தந்தையென போற்றபடுபவர்

   (A) Dr. பிரதாப் ரெட்டி

   (B) நாராயண மூர்த்தி

   (C) வர்கிஸ் குரியன்

   (D) அசிம் பிரேம்ஜி

II. பின்வரும் வினாக்களுக்கு ஒரு வாக்கியத்தில் விடையளிக்கவும் : $8 \times 1 = 8$

9. கி.பி. 1798-க்கு பிறகு ஐதராபாத் மாகாணத்தில் ஆங்கிலப் படை ஏன் நிறுத்தி வைக்கப்பட்டது ?

10. இராமக்கிருஷ்ணா மிஷன் (மடம்) ஏன் ஏற்படுத்தப்பட்டது ?

11. ஐ.நா. வின் உணவு மற்றும் விவசாய கழகத்தின் (FAO) முதன்மையான நோக்கம் என்ன ?

12. கைகா அணு சக்தி எதிர்ப்பு போராட்டம் ஏன் நடைபெற்றது ?

13. சிவப்பு கப்பி மண் (Laterite Soil) எவ்வாறு உருவாகிறது?

14. மக்களடர்த்தி என்றால் என்ன ?

15. ஒரு நாட்டின் தனிநபர் வருமானம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது ?

16. ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 15ம் நாளை “உலக நுகர்வோர் உரிமை தினம்” என ஏன் கடைபிடிக்கப்படுகிறது ?

III. பின்வரும் வினாக்களுக்கு இரண்டு வாக்கியங்களில் விடையளிக்கவும் : $8 \times 2 = 16$

17. இந்தியாவிற்கு ஒரு புதிய கடல்வழியை கண்டுபிடிக்க ஐரோப்பியர்களை தூண்டிய காரணிகள் யாவை ?

18. நாட்டுப் பிரிவினை ஏற்பட்டதி ருந்து அகதிகளின் வருகை இந்தியாவின் மிகப்பெரும் சுமையான பிரச்சனையாக எவ்வாறு மாறியது ?

19. நம் நாட்டு வெளியுறவுக் கொள்கை எந்தெந்த அம்சங்களின் சிறப்பால் உருவாக்கப் பட்டது?

அல்லது

ஐ.நா. பாதுகாப்பு சபை ஏன் ஐ.நா. வின் அமைச்சரவை என கருதப்படுகிறது ?

20. குழந்தை கடத்தல் எவ்வாறு குழந்தைகளின் பன்முக வளர்ச்சியை தடைசெய்து பாதிப்பை ஏற்படுத்துகிறது ?

அல்லது

தொழிற்பிரிவு எவ்வாறு நன்மை பயக்கக்கூடியதாக அமைகிறது ?

21. கிழக்கு கடற்கரை சமவெளி எவ்வாறு மேற்கு கடற்கரை சமவெளியி ருந்து வேறுபடுகிறது?

22. பின்வருவனவற்றுள் எவை தனிநபர் தகவல் தொடர்பு என்றும் எவை பொது தகவல் தொடர்பு சாதனம் என்றும் வேறுபடுத்துக.

அஞ்சல் (கடிதம்), தொலைகாட்சி, ஃபேக்ஸ் (Fax), ரேடியோ

23. பொது மக்கள் செலவுகளின் நோக்கங்கள் எவ்வாறு ஒரு நாட்டின் பன்முக வளர்ச்சிக்கு வழி வகுக்கிறது என்பதை விவரி.

24. பல்வேறு வகை வங்கி கணக்குகள் யாவை ?

IV. பின்வரும் வினாக்களுக்கு ஆறு வாக்கியங்களில் விடையளிக்கவும் : $9 \times 3 = 27$

25. ஆங்கிலேயரின் நிலவரி வசூல் முறை எவ்வாறு இந்திய விவசாயத்தை பாதித்தது ?

26. மூன்றாம் மற்றும் நான்காம் ஆங்கில மைசூர்ப் போர்கள் திப்பு சுல்தானின் வ மையை எவ்வாறு குன்றச் செய்தன ?

அல்லது

இந்திய கலாச்சாரத்திற்கும் அரசியலுக்கும் திருமதி அன்னிபெசண்ட் அம்மையார் ஆற்றிய பணிகளை நாம் ஒருபோதும் மறக்க இயலாது. இது குறித்து விவரி.

27. 20ம் நூற்றாண்டில் சீனா எவ்வாறு ஒரு வ மை மிகு நாடாக உருப்பெற்றது ?

28. இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கிடையே நிலவும் நல்லுறவைக்குறித்து விவரி.

29. அண்மைக்காலமாக தீண்டாமை பிரச்சனைகள் குறைந்து வருவதற்கான காரணங்கள் குறித்து விவரி.

30. தற்போது காடுகளின் பரப்பளவு குறைந்துகொண்டே வருவதற்கான காரணங்கள் யாவை ?

31. பெரும்பாலான இரும்பு மற்றும் எஃகுத் தொழிற்சாலைகள் ஒடிசா மற்றும் மேற்கு வங்க மாநிலங்களில் அமைக்கப்பட்டுள்ளதற்கான காரணங்களை கூறுக.

அல்லது

வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவு ஆகியவற்றுக்குகான மனித காரணங்கள் குறித்து விவரி.

32. பஞ்சாயத்து ராஜ் அமைப்பின் குண இயல்புகளை கூறுக.

அல்லது

பணத்தின் பல்வேறு பரிணாம வளர்ச்சிநிலை வடிவங்களை கூறுக.

33. ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு உலகமயமாக்கல் எவ்வாறு துணை புரிகிறது ?

அல்லது

ஒரு நாட்டு பொருளாதார முன்னேற்றத்திற்கு தொழில் முனைவர் எவ்வாறு உதவுகிறார்?

V. பின்வரும் வினாக்களுக்கு எட்டு வாக்கியங்களில் விடையளிக்கவும் : $4 \times 4 = 16$

34. ஒத்துழையாமை இயக்கத்தின் முக்கிய செயல்கள் குறித்து விவரி.

35. கி.பி. 1857-ம் ஆண்டு நடைபெற்ற பெரும்புரட்சியின் அரசியல் மற்றும் நிர்வாக காரணங்களை விவரிக்கவும்.

அல்லது

விடுதலை இயக்கத்தின் போது தீவிரவாதிகள் ஆற்றிய அரும்பங்கை விவரி.

36. பெண்களின் நிலை உயர அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் யாவை ?

37. கோதுமை மற்றும் கரும்பு பயிரிடத் தேவையான இயற்கைச் சூழல்கள் யாவை ?

VI. 38. இந்தியத் தரைப்படம் வரைந்து, பின்வரும் இடங்களைக் குறிக்கவும் : 1 + 4 = 5

a) 82½° கிழக்கு தீர்க ரேகை

b) நர்மதை ஆறு

c) பக்ராநங்கல் அணைத்திட்டம்

d) மும்பை-ஹை

பார்வைத் திறன் அற்றோர்க்கான வினா. வினா எண் 38க்கான மாற்று வினா :

பல்நோக்கு ஆற்றுப்பள்ளத்தாக்கு அணைக்கட்டு திட்டங்களின் நோக்கங்கள் யாவை ?